KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# ஆட்சி அமைக்க விஜய்யை அழைக்காதது ஏன்?

**சென்னை, மே 7:** 'பெரும்பான்மையை உறுதிப்படுத்தவில்லை என்பதால் ஆட்சி அமைக்க அழைக்கவில்லை' என தவெக தலைவர் விஜய்யிடம் ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர் வியாழக்கிழமை விளக்கம் அளித்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக தவெக உருவெடுத்துள்ளது. திமுக 59 தொகுதிகளிலும், அதிமுக 47 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. திமுக கூட்டணியில் இடம் பெற்ற காங்கிரஸ் 5, விசிக, மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலா 2, தேமுதிக 1, அதிமுக கூட்டணியில் இடம் பெற்ற பாமக 4, பாஜக, அமமுக தலா 1 எனக் கட்சிகளின் பலம் உள்ளது. மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 108-இல் தவெக வெற்றி பெற்றிருந்தாலும், ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவைப்படுவதால் தனிப்பெரும்பான்மை இல்லாத நிலை உள்ளது.

திமுக கூட்டணியில் இருந்த காங்கிரஸ் கட்சி, தவெகவுக்கு தனது ஆதரவைத் தெரிவித்தது. இதையடுத்து தவெக, காங்கிரஸ் என 112 எம்எல்ஏக்களின் ஆதரவு கடிதத்துடன் ஆட்சி அமைக்க உரிமை கோரும் கடிதத்தை தவெக தலைவர் விஜய், தமிழக ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகரிடம் புதன்கிழமை வழங்கினார்.

இருப்பினும் தவெகவுக்கு அறுதிப் பெரும்பான்மை இல்லாததால், ஆட்சி அமைக்க விஜய்க்கு ஆளுநர் அழைப்பு விடுக்கவில்லை. இதனால், சென்னை நேரு உள்விளையாட்டரங்கில்

## ஆளுநர் ஆர்லேகர் விளக்கம்



தவெக தலைவர் விஜய் தலைமையிலான அமைச்சரவை பதவியேற்பு விழாவுக்கான முன்னேற்பாடு பணிகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டன.

இதற்கிடையே, விஜய்யின் கடிதத்தை ஆளுநர் ஆர்லேகர் பரிசீலனை செய்ததோடு, சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளையும் பெற்றதாகத் தெரிகிறது. அதன் பின்னர், ஆளுநர் மாளிகையிலிருந்து விஜய்க்கு வியாழக்கிழமை அழைப்பு விடுக்கப்பட்டது. அதன்பேரில், விஜய் மற்றும் கட்சியின் பொதுச் செயலர் என்.ஆனந்த், இணைப் பொதுச் செயலர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் உள்ளிட்டோருடன் ஆளுநர் மாளிகைக்கு காலை 9.45 மணிக்கு வந்தார்.

ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர் - விஜய் ஆகியோரது சந்திப்பு சுமார் அரை மணி நேரத்துக்கும் மேலாக நீடித்தது. அப்போது விஜய்யிடம், ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்காதது குறித்து ஆளுநர் விளக்கம் அளித்தார்.

ஆளுநருடனான சந்திப்புக்குப் பிறகு, விஜய் தரப்பில் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. அவர் தனது பட்டினப்பாக்கம் இல்லத்துக்கு புறப்பட்டுச் சென்றார்.

விஜய்யுடனான சந்திப்பு குறித்து ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழக ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர், தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவர் சி. ஜோசப் விஜய்யை, ஆளுநர் மாளிகைக்கு வியாழக்கிழமை அழைத்தார். அவருடனான சந்திப்பின்போது, அவரிடம் ஆட்சி அமைப்பதற்கு தமிழக சட்டப்பேரவையில் தேவைப்படும் பெரும்பான்மை ஆதரவை தவெக தரப்பில் இன்னும் உறுதிப்படுத்தவில்லை என்பதை ஆளுநர் விளக்கினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆளுநர் பேட்டி:** ஆங்கிலத் தொலைக்காட்சி ஒன்றுக்கு ஆளுநர் ஆர்லேகர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

விஜய் பதவியேற்பதை நான் தடுப்பதாக எவ்வாறு கூற முடியும்? விஜய் ஆட்சி அமைப்பதில் எனக்கு எந்த ஆட்சேபமும் இல்லை. 118 என்ற பெரும்பான்மை எண்ணுடன் வந்தால் நாளையே ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்கத் தயார்.

திமுக-அதிமுக இணைந்து ஆட்சி அமைக்க உரிமை கோரினாலும் அது சாத்தியம். என்னால் அந்தச் சூழலைப் புறக்கணிக்க முடியாது.

பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டியது ஆளுநர் மாளிகையில் அல்ல, சட்டப்பேரவையில்தான் என்று எஸ்.ஆர். பொம்மை தீர்ப்பு வரையறுத்துள்ளது குறித்து கேட்கிறீர்கள். முற்றிலும் உண்மை. ஆனால், எஸ்.ஆர். பொம்மை வழக்கு ஒரு புதிய அரசு அமைப்பது பற்றியது அல்ல. தற்போதைய சூழல் என்பது தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு ஒரு புதிய அரசை அமைப்பது பற்றியதாகும்.

போதுமான எண்ணிக்கை இல்லாத எந்தவொரு கட்சியையும் ஆட்சி அமைக்க அழைக்க முடியாது. பெரும்பான்மை இல்லாதது விஜய்க்கு மட்டும் பிரச்னை அல்ல, ஒட்டுமொத்த தமிழகத்துக்கும் பிரச்னை. பெரும்பான்மை இல்லாத ஆட்சி அமைத்து குதிரை பேரம் நடத்துவதை அனுமதிக்க முடியாது. 118 எம்எல்ஏக்களையும் என் கண் முன் நிறுத்த வேண்டும் என நான் கூறவில்லை.

இதே நிலை நீடித்தால் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியுள்ளார்.

## தமிழக ஆளுநருடன் தலைமைச் செயலர், டிஜிபி சந்திப்பு

தமிழக தலைமைச் செயலர் எம்.சாய்குமார், தமிழக காவல் துறை தலைமை இயக்குநர் (டிஜிபி) சந்தீப் ராய் ரத்தோர் ஆகியோர் ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகரை வியாழக்கிழமை மாலை ஆளுநர் மாளிகையில் சந்தித்துப் பேசினர்.

தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் முதல்முறையாக ஆளுநர் ஆர்லேகர் தமிழக உயர் அதிகாரிகளை சந்தித்துப் பேசியுள்ளார்.

குறிப்பாக, தவெக ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்கப்படாத நிலையில் போராட்டங்கள் நடைபெறக்கூடும் என்பது குறித்த வதந்திகள் பரவிய நிலையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

தலைமைச் செயலரும், டிஜிபியும் தமிழகத்தின் சட்டம்- ஒழுங்கு நிலை, பாதுகாப்பு ஏற்பாடுகள், நுண்ணறிவுப் பிரிவு தகவல்கள் ஆகியவற்றைப் பகிர்ந்து கொண்டதாகத் தெரிகிறது.

## இடதுசாரிகள், ஐயூஎம்எல் தலைவர்களுடன் தவெக நிர்வாகிகள் சந்திப்பு

சென்னையில் இடதுசாரி கட்சித் தலைவர்களை தவெக இணைப் பொதுச் செயலர் சி.டி.ஆர். நிர்மல்குமார் சந்தித்துப் பேசினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் அக்கட்சியின் மாநிலச் செயலர் பெ.சண்முகம், அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் கனகராஜ் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார். அப்போது, தவெக ஆட்சி அமைக்க ஆதரவு கோரினார்.

தொடர்ந்து, இந்திய கம்யூனிஸ்ட் மாநில அலுவலகத்தில் மாநிலச் செயலர் மு.வீரபாண்டியன், துணைச் செயலர் நா.பெரியசாமி ஆகியோருடன் நிர்மல்குமார் கலந்துரையாடி, தவெகவுக்கு ஆதரவு கேட்டார். மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் வெள்ளிக்கிழமை (மே 8) நடைபெறுவதால், அதில் விவாதித்து உரிய முடிவு எடுக்கப்படும் என இரு கட்சி நிர்வாகிகளும் நிர்மல்குமாரிடம் பதில் அளித்தனர்.

தவெக வசம் தற்போது 112 இடங்கள் உள்ள நிலையில், விசிக, மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளிடம் உள்ள தலா 2 இடங்கள், தவெக ஆட்சி அமைப்பதில் துருப்புச் சீட்டாக மாறியுள்ளது.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) கட்சியின் தேசியத் தலைவர் காதர் மொகிதீனை தவெக கொள்கை பரப்புச் செயலர் கே.ஜி. அருண்ராஜ் நேரில் சந்தித்து ஆதரவு கோரினார். ஆனால், இதை ஏற்க மறுத்த காதர் மொகிதீன், திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் என்ன முடிவு எடுக்கிறாரோ அதை அப்படியே பின்பற்றுவோம் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

# தாய், தந்தை இல்லா பள்ளிக் குழந்தைகளுக்கு மாதம் ரூ.2 ஆயிரம் வழங்கும் சிறப்புத் திட்டம் தொடக்கம்

**சென்னை, மே 7:** சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் தாய், தந்தை இருவரும் இல்லாத குழந்தைகளுக்கு மாதம் ரூ.2 ஆயிரம் வழங்கும் 'அன்பின் கரங்கள்' திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது என மாநகராட்சி இணை ஆணையர் (கல்வி) க.கற்பகம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பிளஸ் 2 வரையிலான வகுப்புகளில் பயிலும் குழந்தைகளில் தாய், தந்தை இருவரும் இல்லாதவர்கள் கணக்கெடுக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, நிகழ் ஆண்டில் 86 பேருக்கு மாதம் தலா ரூ.2 ஆயிரம் நிதியுதவி, அன்புக் கரங்கள் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளது. அவர்களுக்கு 18 வயது நிறைவடையும் வரை மாதந்தோறும் இந்த கல்வி உதவி வழங்கப்படும்.

பள்ளிக் கல்வி இடைநிற்றலைத் தவிர்க்கும் வகையில் இந்த நிதியானது வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் தொடர்புடைய குழந்தைகளின் பாதுகாவலர் அல்லது சம்பந்தப்பட்ட குழந்தைகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக அந்தத் தொகை வரவு வைக்கப்படும்.

**கணக்கெடுப்பு:** மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளில் தாய் அல்லது தந்தை என ஒருவர் இல்லாத நிலையில் உள்ளவர்களும் கணக்கெடுக்கப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கான மாதாந்திர உதவித் தொகையும் விரைவில் வழங்கப்படவுள்ளது என்றார்.

# போதைப் பொருள் இல்லாத மாநிலமாக தமிழகத்தை மாற்ற விரைவான நடவடிக்கை

## உயர்நீதிமன்றம் உத்தரவு

மதுரை, மே 7: தமிழகத்தை போதைப் பொருள்கள் இல்லாத மாநிலமாக மாற்ற விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியம் என சென்னை உயர்நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது.

போதைப் பொருள்கள் கடத்தல் வழக்குகளில் கைது செய்யப்பட்டு மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட நீதிமன்றங்களால் 11 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட அதே பகுதிகளைச் சேர்ந்த சரஸ்வதி, அறிவழகன் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில், விசாரணை நீதிமன்றங்கள் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்றும், பிணை வழங்கி உத்தரவிட வேண்டும் என்றும் மேல்முறையீட்டு மனுக்களை தனித் தனியாக தாக்கல் செய்தனர்.

இந்த மனுக்களை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி பி. புகழேந்தி அண்மையில் பிறப்பித்த உத்தரவு:

போதைப் பொருள்களைக் கடத்தியதாக போதை மருந்துகள், மனநோய் பொருள்கள் (என்டிபிஎஸ்) சட்டத்தின் கீழ் பதியப்பட்ட வழக்குகளில் ஈட்டிய வருவாய் குறித்து நிதிசார் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதன்மூலம், சட்டவிரோத சொத்துகளைப் பறிமுதல் செய்வதைக் கட்டாயமாக்க வேண்டும். இந்த வழக்கு விசாரணைகள் வெறும் கைப்பற்றல், கைது நடவடிக்கைகளுடன் மட்டும் நின்றுவிடக் கூடாது. இந்தக் குற்றச் சம்பவங்கள் அதிகம் நிகழக்கூடியப் பகுதிகளில் உள்ள பேருந்துகள், ரயில்களில் திடீர் சோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் கஞ்சா கடத்தலைத் தடுக்கும் விதமாக செயல்படும் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவுடன் இணைய குற்றத் தடுப்புப் பிரிவையும் புதிதாக உருவாக்க வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளுக்குத் தேவையான பணியாளர்களை நியமிப்பதற்கு அது முன்னுரிமை வழங்க வேண்டும்.

இதுபோன்ற விரைவான நடவடிக்கைகளால் மட்டுமே தமிழகத்தை போதைப் பொருள்கள் இல்லாத மாநிலமாக மாற்ற இயலும் என்றார் நீதிபதி.

# பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட இந்தியா உறுதி: பிரதமர் மோடி

புது தில்லி, மே 7: 'பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் உறுதியான பதிலடியே 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை. பயங்கரவாதத்தையும், அதற்கு துணைபுரியும் கட்டமைப்பையும் ஒழித்துக்கட்ட இந்தியா இப்போதும் அதே உறுதியுடன் உள்ளது' என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.



பஹல்காம் தாக்குதலுக்குப் பதிலடியாக பாகிஸ்தான் மீது இந்திய ராணுவம் மேற்கொண்ட 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையின் முதலாம் ஆண்டு தினத்தையொட்டி, பிரதமர் மோடி இவ்வாறு கூறினார்.

ஜம்மு-காஷ்மீரில் 'மினி ஸ்விட்சர்லாந்து' என வர்ணிக்கப்படும் பஹல்காமில் கடந்த ஆண்டு ஏப்ரல் 22-ஆம் தேதி லஷ்கர்-ஏ - தொய்பா பயங்கரவாதிகள் 3 பேர் நடத்திய கொடூரமான துப்பாக்கிச்சூட்டில் 25 சுற்றுலாப் பயணிகள் மற்றும் குதிரை சவாரி தொழிலாளி ஒருவர் என 26 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பழிதீர்க்க,பாகிஸ்தான் மற்றும்பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பயங்கரவாத உள்கட்டமைப்புகளைக் குறிவைத்து 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரிலான ராணுவ நடவடிக்கையை கடந்த ஆண்டு மே 6-7 தேதிகளுக்கு இடைப்பட்ட இரவில் தொடங்கியது இந்திய ராணுவம். இந்த அதிதுல்லியத் தாக்குதலில் பயங்கரவாத உள்கட்டமைப்புகள் தகர்க்கப்பட்டதுடன், 100-க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே ராணுவ மோதல் மூண்டது.

மே 10-ஆம் தேதி வரை நீடித்த இந்த மோதலில் பாகிஸ்தான் ராணுவத் தளங்களுக்கும் கடும் சேதம் விளைவிக்கப்பட்டது. பாகிஸ்தான் வேண்டிக் கேட்டுக் கொண்டதால், சண்டை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

**பிரதமர் மோடி உறுதி:** 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையின் முதலாம் ஆண்டு தினத்தையொட்டி, பிரதமர் மோடி வியாழக்கிழமை வெளியிட்ட எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது:

பயங்கரவாதத்துக்கு எதிரான உறுதியான பதிலடி மற்றும் நாட்டின் பாதுகாப்பைப் பேணுவதில் நமது அர்ப்பணிப்பை 'ஆபரேஷன் சிந்தூர்' பிரதிபலித்தது. ஓராண்டுக்கு முன்பு இந்திய ஆயுதப் படைகள் ஈடுஇணையற்ற துணிவையும், நுட்பத்தையும், உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தினர். அவர்களின் துணிவுக்கு ஒட்டுமொத்த நாடும் தலைவணங்குகிறது.

இந்திய பாதுகாப்புப் படையினர் இடையே வளர்ந்துவரும் ஒருங்கிணைப்பை வெளிக்காட்டுவதாகவும், பாதுகாப்புத் துறையில் தற்சார்புக்கான முன்னெடுப்புகளால் நாட்டின் பாதுகாப்பு வலுவடைந்துள்ளதை அடிக்கோடிட்டுக் காட்டுவதாகவும் ஆபரேஷன் சிந்தூர் அமைந்தது. பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கவும், அதற்குத் துணைபுரியும் கட்டமைப்பை ஒழித்துக்கட்டவும் இந்தியா இப்போதும் அதே உறுதியுடன் உள்ளது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

## 'இந்தியாவை அச்சுறுத்த நினைத்தால் வலுவான பதிலடி'



குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'பயங்கரவாதத்துக்கும் நாட்டின் இறையாண்மை- குடிமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் சக்திகளுக்கும் எதிரான இந்தியாவின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டுக்கு தெளிவான சான்று 'ஆபரேஷன் சிந்தூர்'. வெற்றிகரமான இந்த நடவடிக்கை, நமது ஆயுதப் படைகளின் ஈடுஇணையற்ற துணிவு மற்றும் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. இந்தியாவை அச்சுறுத்த நினைப்பவர்களுக்கு விழிப்புடனும், ஒற்றுமையுடனும், வலிமையுடனும் பதிலடி தர தேசம் தயாராக உள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

## பிரதமரின் சமூக ஊடக முகப்பு படங்களில் 'ஆபரேஷன் சிந்தூர்'

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு மரியாதை செலுத்தும் விதமாக, தனது அனைத்து சமூக ஊடக கணக்குகளின் முகப்புப் படத்தை மாற்றியுள்ளார் பிரதமர் மோடி. அதன்படி, மூவர்ணக் கொடியுடன் ஆபரேஷன் சிந்தூர் என்ற வாசகம் இடம் பெற்ற படம், பிரதமரின் எக்ஸ், ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம், வாட்ஸ்ஆப் போன்ற அனைத்து சமூக ஊடக கணக்குகளின் முகப்பு படமாகியுள்ளது.

பிரதமர் விடுத்த வேண்டுகோளின்பேரில், பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், பாஜக தேசியத் தலைவர் நிதின் நபின் உள்ளிட்டோரும் தங்களின் சமூக ஊடக முகப்புப் படமாக 'ஆபரேஷன் சிந்தூர்' படத்தை வைத்துள்ளனர். சிந்தூர் என்ற ஹிந்தி வார்த்தைக்கு குங்குமம் என்று அர்த்தமாகும்.

## போர்முறைக்குப் புதிய அளவுகோல்



பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்ட விடியோ செய்தியில், 'ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை, நவீன போர்முறைக்கு புதிய அளவுகோலை நிர்ணயித்தது. இந்த நடவடிக்கையின்போது இந்திய ராணுவத்தினர் ஈடுஇணையற்ற துணிவு, துல்லியத்தன்மை, ஒருங்கிணைப்பை வெளிப்படுத்தினர். நாட்டின் பாதுகாப்பு மற்றும் ராணுவ தயார்நிலைக்கு சக்திவாய்ந்த அடையாளம் ஆபரேஷன் சிந்தூர்' என்று தெரிவித்துள்ளார்.